**DEPOSITION OF WITNESS**
**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR</u>**

CC.No.333/2025
Prosecution witness.05

| | |
|---|---|
| பெயர் : சிவக்குமார் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : சுப்பையா | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

<u>12.03.2026</u>

(2ம் எதிரி ஆஜர், 1ம் எதிரி ஆஜர் இல்லை. 1ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**<u>முதல் விசாரணை :</u>**

**1)** நான் தற்போது முதுகுளத்தூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்து புலன்விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த சார்பு ஆய்வாளர் திரு.சக்திவேல் அவர்கள் பணிமாறுதலாகி சென்று விட்டதாலும், அவர் என்னுடைய காவல்நிலையத்தில் பணிபுரிந்த காரணத்தினால் அவரது கையொப்பம் நன்கு தெரியும் என்பதன் அடிப்படையிலும், ஆவணங்கள் அடிப்படையிலும் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 09.11.2024ம் தேதி சார்பு ஆய்வாளர் திரு.சக்திவேல் காவல் நிலையப் பொறுப்பில் இருந்தபோது பரமக்குடி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த முதுகுளத்தூர் தாலுகா, சுப்பிரமணியபுரத்தை சேர்ந்த பிரியதங்கம், க.பெ.இராஜிவ் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று 16.15 மணிக்கு நிலையம் வந்து புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண்.262/2024 பிரிவுகள் 296(b), 115(2), 351(3) BNS கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **புகார் மனு அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**2)** அவர் வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 17.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முனியசாமி மற்றும் சந்திரசேகர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3)** அன்றைய தினமே பட்டியல் சாட்சிகளான பிரியதங்கம், திலகவதி, செல்வி, முனியசாமி மற்றும் சந்திரசேகர் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கு சம்பவம் உண்மை என தெரிய வந்ததாலும் எதிரிகள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டது உண்மை என தெரியவந்ததாலும் எதிரிகளை தேடிவந்த நிலையில் 1ம் எதிரியை 09.11.2024ம் தேதி 18.45 மணிக்கு பாண்டிக்கண்மாய் விலக்கு ரோடு அருகே காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். 2ம் எதிரியை 13.11.2024ம் தேதி சுமார் 09.30 மணிக்கு புளியங்குடி கண்மாய்கரை அருகே கைது செய்து நிலையம் அழைத்து வந்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார்.

**4)** இவ்வழக்கில் காயம்பட்ட அசா.1க்கு சிகிச்சை அளித்த பரமக்குடி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.ஜெகநாதன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி மருத்துவர் அவர்கள் அசா.1க்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கியதையும் பெற்றுள்ளார். **அசா.1க்கு பரமக்குடி அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு அசா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கில் தடயப் பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

**5)** அத்துடன் வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 115(2), 351(3) BNS கீழ் இறுதி அறிக்கையை 18.11.2024ம் தேதியன்று கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

வாதி கொடுத்த பொய் புகாரை முறையாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.